18.04.2022. சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி. செய்யப்பட்டது.(ஓ.எஸ்.எண். 170 /2019 )வா.சா.1. துரைராஜ்.

3 ம் பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.

நான் என்ன படித்துள்ளேன் என்றால்பி.ஏ. படித்துள்ளேன். நான் என்ன வேலை பார்த்தேன் என்றால் தமிழ்நாடு கிராம வங்கியில் எழுத்தராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் எத்தனை வருடங்களாக எழுத்தராக வேலை பார்த்தேன் என்றால் 29 வருடங்களாக பார்த்தேன். எனக்கு பணிஉயர்வு கிடைக்கவில்லையா என்றால் இல்லை. நான் எனது பாரா 5ல் சிவநாராயணசாமி ரெட்டியாருக்குப்பாத்திப்பட்ட சொத்துக்களை நானும், 3ம்பிரதிவாதியும் வாரிசு அடிப்படையில் அடைந்து அனுபவம் செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேலும் ' சிவநாராயணசாமி ரெட்டியாருக்குப்பாத்தியப்பட்டு அவரின் பெயரில் பட்டா ஏற்பட்டு' அவரும் நானும், 3ம்பிரதிவாதியும் சேர்ந்து அனுபவம் செய்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இறந்து போன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு நானும், 3ம்பிரதிவாதியும் சட்டப்படியான வாரசுகள் என வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வட்டாட்சியர் அலுவலகத்தில் விசாரணையின் போது எனது தகப்பனாருக்கு 2 மனைவிகள் இருப்பதாக கூரி வாரிசு சான்று தர மறுத்து விட்டார்கள் என்றால் சரிதான். பிராது பாரா 4ல் சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு இந்து வாரிசு உரிமை சட்டப்படி நானும், 3ம்பிரதிவாதியும் நேரிடையான வாரிசு என குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இராஜாத்தியம்மாள் என்பவரின் இறப்பு சான்றிதழை நான் வா.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் கண்டுள்ள விவரங்கள் உண்மையானவைகள் தான்.வா.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்களை எனது தந்தையால் கூறப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் இறந்து போன இராஜாத்தியம்மாளின் கணவர்பெயர் சிவநாராயணசாமி ரெட்டியார் என கண்டுள்ளது என்றால் சரிதான். நான் சிவநாராயணசாமி ரெட்டியாரின் முதல் திருமணத்தின் மூலமும், 3ம்பிரதிவாதி 2வது திருமணத்தின் மூலமும் பிறந்தவர்கள் என்றால் சரிதான். எனது தாயாரின் பெயர் சீதாலட்சுமி என்றால் சரிதான். 3ம்பிரதிவாதியின் தாயார் பெயர் இராஜாத்தியம்மாள் என்றால் சரிதான். சீதாலட்சுமி, இராஜாத்தியம்மாள் இருவரும் உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். எனது சகோதரி செல்வதுரைச்சி எந்த வருடம் இறந்தார் என்றால் 1993ல் இறந்து போனார். அவரின் கணவர் பெயர் மாரிதுரை ரெட்டியார் என்றால் சரிதான். மாரிதுரைரெட்டியார்

2019ல் இறந்துபோய் விட்டார் என்றால் சரிதான். என்னுடைய சகோதரரியான செல்வதுரைச்சியை எனது தாய்மாமாமாரிதுரை ரெட்டியாருக்கு தான் திருமணம்செய்து வைத்தோம்என்றால் சரிதான். மாரிதுரை, செல்வதுரைச்சி ஆகிய இருவருக்கும் ஜெயகுமார், லலிதா, உமா ஆகியோரர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். ஷை மூன்றுபேரில் உமா என்பவர் திருமணம் இன்றி இறந்து போனார் என்றால் சரிதான். லலிதா என்பவர் கடந்த 2000ம் வருடத்தில் லலித்மோகன் என்பவரை வாரிசாக வைத்துவிட்டு இறந்து விட்டார் என்றால் சரிதான். இறந்து போன செல்வதுரைச்சி வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினராக நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். 3ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்துப்பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன். எதிர்வழக்குரையில் 'ஏற்கனவே சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு 28.08.2012ம்தேதியில் கோவில்பட்டி வட்டாட்சியரால் ப.மு.ஆ.1/4581/2012 என்ற வரிசையில் வாரிசு சான்று' வழங்கப்பட்டதை வாதியாகிய நான் கோவில்பட்டி கோட்டாட்சியருக்கு புகார்கொடுத்து ரத்து செய்து விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் கோட்டாட்சியர் ஷை வாரிசுசான்றை ரத்து செய்து வழங்கிய உத்தரவு நகல் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1 ஆகும். எனது சகோதரின் வாரிசுகளை சேர்த்து வாரிசு சான்று வழங்குவதற்கு எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் எனதுதாயாரின் காலத்திலேயே எனது சகோதரிக்கு கொடுக்கவேண்டிய அனைத்தையும் கொடுத்துவிட்டோம் ஆகவே எனது சகோதரின் வாரிசை இணைத்து வாரிசு சான்று வழங்க எனக்கு ஆட்சேபனை உள்ளது. எனது பிராதிலோ முதல் விசாரணையிலோ எனது சகோதரிக்கு கொடுக்கவேண்டியதை கொடுத்துவிட்டோம் என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எனது சகோதரியின் வாரிசு விவரத்தைமறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனக்கு கிடைக்கவேண்டிய பரிகாரம் கிடைக்கத்தக்கதில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு எனது சகோதரியின் வாரிசுகளும் வாரிசுதாரர்கள் என்றால் சரியல்ல. எனதுவழக்குரையில் எனது தாயாரும் 3ம்பிரதிவாதியின் தாயாரும் உடன்பிறந்த சகோதரிகள் என்ற விவரத்தையும் கூறவில்லை என்றால் சரிதான். செல்வதுரைச்சியின் வாரிசுகளை சேர்க்காமல் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியதுஎன்றால்சரியல்ல. செல்வதுரைச்சிக்கு எனது தாயாரின்

காலத்தில் கொடுக்கவேண்டியதை கொடுத்துவிட்டதாக இவ்வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

1,2 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி. 3ம்பிரதிவாதியின் குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொண்டதாக எடுத்துரைக்கப்பட்டதால் கு.வி.முடிக்கப்பட்டது.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வே.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
18.04.2022.